அழகிய ஆரம்பம்...

இன்று ஈ இதழ்

பக்கம் 11
நாள் 30.03.25

indhrumail@gmail.com

அனைவருக்கும் வணக்கம்.
சென்ற இதழின் டிஜிட்டல் வித்யாசத்தை பலரும் பாராட்டினர். சில படைப்பாளர்களின் போட்டோக்கள் கையால் வரைந்த ஆர்ட் போல மாற்றப்பட்டுள்ளது. அதை கூர்ந்து கவனித்தால் தான் தெரியும். நமது டெக்னிக்கல் டீமுக்கு இனி ஹரி பொறுப்பேற்பார். நன்றி... நான் வெ.கோபிநாத் ஆசிரியராக பொறுப்பேற்கிறேன்.

அது போல் டெக் ட்ரிக் சில காலம் நிறுத்தப்பட்டுள்ளது. எளிய கன்ட்டென்டுகள் கிடைக்கவில்லை. சிலவற்றை பெரிய கட்டுரையாக வெளியிட வேண்டியுள்ளது. அவ்வப்போது கிடைத்தால் வெளியிட்டுக்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. இதழில் சிறு போட்டிகள் வைத்து பரிசளிக்க முடிவெடுத்துள்ளோம். இந்த வாரமே இது துவங்குகிறது. அனைவரும் கலந்து கொள்ளுங்கள். தங்கள் ஆலோசனையை சொல்லுங்கள்... நன்றி

வெ.கோபிநாத் ஆசிரியர்

இன்று ஈ பதிப்பு - 29 சக்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை வெளியிடுபவர், ஆசிரியர். ர.ஸ்ரீஹரி



இன்று ஈ பதிப்பு 7094053241 Whatsapp

அழகிய ஆரம்பம்...

இன்று இதழ்

indhrumail@gmail.com



Su	M	Tu	We	Th	Fr	Sa
30	31	March 2025				1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	29



கவிஞர்களே இந்த படத்திற்கேற்ற
கவிதைகளை 8 வரிகளுக்கு மிகாமல்
ஏப்ரல் 04-ம் தேதிக்குள்
எழுதி வாட்சப்பில் மட்டும் அனுப்புங்கள்...
சிறந்த 3 கவிதைகளுக்கு பரிசுகள் உள்ளன... .

இணையவழி மோசடிக்கு
பலியாகாதீர்கள்
அழையுங்கள்

1930

புகார்களை பதிவு செய்ய
www.cybercrime.gov.in

இன்று இதழை உங்கள்
நண்பருக்கும் அறிமுகப்படுத்துங்கள்

இன்று இதழ் | இன்று இதழ் | இன்று இதழ் | 7094053241 Whatsapp | இன்று இதழ் | இன்று இதழ் | இன்று இதழ் | 7094053241 Whatsapp | இன்று இதழ் | இன்று இதழ்

அழகிய ஆரம்பம்...

இன்று ஈ இதழ்

indhrumail@gmail.com

பக்கம் 11
நாள் 30.03.25

தேன் கதைகள்



முத்து ஆனந்த் வேலூர்
செல் : 7010482479

(Love & Love Only)

~~~~~~~~~~

முகம்

பார்த்த இடத்தில் எல்லாம் இலண்டனிலிருக்கும் தன் "காதலன்" பரத்தின் முகமே தெரிந்தது தமிழ் நாட்டிலிருந்த பாவனாவிற்கு...

வாக்குறுதி

சீண்டலும் குறும்பும் செய்யாமலிருந்தால் திரைப்படத்திற்கு அழைத்துச் செல்வதாய் தன் காதலனுக்கு "வாக்குறுதி" அளித்தாள் மஞ்சுளா...

பயம்

பாம்பு, பல்லிக்குக் கூடப் பயப்படாத கீர்த்தனா தன் காதலன் "சீண்டலுக்கு"ப் பயந்தாள்...

கடமை

தான் "சாமி" கும்பிடாவிட்டாலும் தன் காதலி சங்கீதாவை அடிக்கடி "கோயிலுக்கு" அழைத்துச் சென்றான் முத்து...

சஸ்பென்ஸ்

ஆனந்த்தும் புனிதாவும் காதலர் தினத்துக்கு ஒருவருக்குத் தெரியாமல் ஒருவர் "சஸ்பென்ஸாக" ஆண்ட்ராய்டு போன் பரிசளித்துக் கொண்டனர்...



அடிக்கடி தான்
சந்திக்க வருகிறாய்...
ஆனால்
எனக்காக
நீ
ஒரே ஒரே முறையாவது
உன் வெட்கத்தை
வீட்டில்
வைத்து விட்டு
வரக் கூடாதா அன்பே...

முத்து ஆனந்த் வேலூர்

இன்று ஈ இதழ் இன்று ஈ பதிப்பு 7094053241 Whatsapp
~~~~~~~~~~

அழகிய ஆரம்பம்...

இன்று ஈ இதழ்

indhrumail@gmail.com

பக்கம் 11

நாள் 30.03.25



நேரம்

-ஒரு நாள் என்பது 24 மணி நேரமாக இருக்கலாம். ஆனால் அதை எப்படி நாம் பயன்படுத்தினோம் என்று ஒரு சின்ன கணக்கு...

- தூக்கம் குறைந்தபட்சம் 7 மணி நேரம்... குளிப்பது, டிவி பார்ப்பது, போன்ற பொழுதுபோக்குக்கு 3 மணி நேரம் வேலை 8 மணி நேரம் இன்னும் மீதமிருக்கும் 6 மணி நேரம் தான் எங்கு போனது என்று சொல்ல முடியாது... அது பெரும்பாலும் பயணம், தயாராவது, ஆசுவாசம் ஆவது அல்லது வீணாக கழித்தது என்று போயிருக்கும்...

எனவே நீங்கள் உங்கள் நாட்களை ஏதாவது மொழி கற்பது, அல்லது பயிற்சிக்கு செல்வது என்று உங்கள் நேரத்தை நீங்களே பிரித்து கொடுத்துவிட்டால் புதிய அறிவைப் பெறமுடியும். உங்கள் நேரமும் ஏதாவது ஒரு புதிய விசயத்திற்காக செலவு செய்யப்படும்.

எனவே தினசரி இப்படியே இருக்கும் வாழ்வை மாற்றி உங்கள் நேரத்தை பயனுள்ள வகையில் முதலீடு செய்தால் நிச்சயம் நல்ல விளைவுகளை அறுவடை செய்யலாம்.

-தி.ரேவதி-

விளம்பர உலகில்...

- உங்கள் தாலுக்காவில் நீங்கள் ஒருவர் தான் விளம்பரதாரர்...

- உங்கள் வாடிக்கையாளர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்க...

- நல்ல விசயங்களை பகிர...

- உங்கள் Offer - களை உடனுக்குடன் தெரிவிக்க...

- தினசரி ஸ்டேட்டஸ்... மினி வீடியோ விளம்பரங்கள்

- 24 மணி நேரமும் செயல்படும் உங்கள் விளம்பரம்...

- சூப்பர் மார்க்கெட், நகைக்கடை ஜவுளிக்கடை நடத்துபவர்கள் மட்டும் **7094053241** என்ற எண்ணுக்கு உங்கள் விபரத்தை வாட்சப்பில் அனுப்பவும்

- சேர்ந்து கலக்குவோம்...

இன்று ஈ இதழ் | 7094053241 Whatsapp

அழகிய ஆரம்பம்...

இன்று ஈ இதழ்

பக்கம் 11
நாள் 30.03.25

indhrumail@gmail.com

இன்று ஈ இதழ் இன்று ஈ பதிப்பு 7094053241 Whatsapp

மைக்ரோ கதை

-சு.மூன்சுதாகரன்,
வானவன்மகாதேவி.
செல் : 97875 98207



கிடுகிடு...

~~~~~~~~~~

"எனக்கு என்ன பண்றதுன்னே தெரியலையே"
"கிடுகிடுன்னு ஏறுதுங்க..."
முகத்தில் வழிந்த
வியர்வை துடைத்துக் கொண்டே
புலம்பினாள் வரலட்சுமி.

"ஏய் என்னடி ஆச்சு உனக்கு..."
பதட்டத்துடன் நெற்றியில் கைவைத்துத் தொட்டுப் பார்த்த
வசந்தனுக்கு ஒன்றும் புரியவில்லை
கிடுகிடுன்னு ஏறுதுன்னு சொன்னீயே
பிரஷரா? சுகராடி?....

"ஐயோ எனக்கு அதெல்லாம் ஒன்னுமில்லைங்க"

அங்க பாருங்க... டிவி பிளாஷ் நியூஸை...
இந்தத் தங்கம் விலைதான் என்னமா?
கிடுகிடுன்னு ஏறுது...

"அடிப்பாவி கொஞ்ச நேரத்துல எனக்குத் தாண்டி
பிரசர் ஏத்திட்டே?"

ஒரு டம்ளர் தண்ணீரோடு பிரஷர் மாத்திரையைக்
கையிலெடுத்தார் வசந்தன்.

ரகசிய முத்தம்

~ ~ ~ ~ ~ ~ ~ ~ ~ ~



நீ அன்று
திரைமறைவில்
தந்த ரகசிய ஒத்தடம்
நரை நுழைந்த
இப்பருவத்திலும்
கோடை இளநீராய்
நினைக்கையில் குளிருதடி...

-சு.மூன்சுதாகரன்,
வானவன்மகாதேவி.
~~~~~~~~~~

அழகிய ஆரம்பம்...

இன்று எ இதழ்

indhrumail@gmail.com

பக்கம் 11

நாள் 30.03.25

மினிகதை:

பேரம்

மலர்மதி
செல் : 86674 17874



கீரை விற்கும் மூதாட்டியிடம் பேரம் பேசி, இருபது ரூபாய் கீரைக்கட்டை பதினைந்து ரூபாய்க்கு வாங்கினான் பக்தவச்சலம்.

மறுநாள் சூப்பர் மார்க்கெட்டில் 100 ரூபாய் மதிப்புள்ள எண்ணெய் பாட்டில் மேல் 200 ரூபாய் ஸ்டிக்கர் ஒட்டியிருக்க பேசாமல் 200 ரூபாய் கொடுத்து வாங்கி வந்தான் பக்தவச்சலம்.



சிரிப்பு

சுரேஷ்
திருச்சிற்றம்பலம்
செல் : 90921 42678

பாட்டி.. நீங்க எதற்காக நடைப்பயிற்சி செய்கிறிங்க..?
நான் சுகர் குறைக்க செய்யிறேன். நீ ?...

நான் ஒருவரை காதலிக்கிறேன்.பெற்றோர் எதிர்த்தால் அவரோடு ஓடிப்போக என்னையே..
நான் தயார்ப்படுத்திக்கொள்கிறேன்.

.....

வீட்டுல பிரியாணி செய்கிறன்னைக்கு என் மனைவியின் அலப்பறை தாங்க முடியாது.

என்ன செய்வாங்க?

தலையில் தலைப்பாகை கட்டிக்கொண்டு இதுதான் "தலைப்பா கட்டு பிரியாணி" என்று சொல்வாள்.

இன்று எ இதழ் இன்று எ இதழ் 7094053241 Whatsapp

பல்சுவை



நடேஷ் கன்னா,
கல்லிடைக்குறிச்சி
செல். 9944284135

கணக்கு டீச்சரா கொக்கா...?

கணிதப் பேராசிரியையான ஒரு பெண்மணி தன் கணவனுக்குக் கிடைத்த 10 லட்ச ரூபாயை எங்கே முதலீடு செய்வது என்று அருமையான அறிவுரையைக் கூறினார்.

நீங்களும் முயற்சிக்கலாமே...

1..2..3...4...5...6...7...8...9...

மேலே கண்ட எண்களில் ஒரு லக்கி எண்ணை எடுத்துக் கொள்ளுங்கள்.

அதை 3ஆல் பெருக்கவும்

வரும் விடையுடன் 3 ஐக் கூட்டவும்.....

விடையை 3 ஆல் மீண்டும் பெருக்கவும்....

இப்போது இரண்டு இலக்க எண் கிடைத்ததா?

அந்த இரண்டு இலக்கங்களைக் கூட்டவும்

அந்த எண் தான் உங்கள் முதலீட்டு இலக்கு.
அந்த எண்ணை வைத்து நீங்கள் எதில் முதலீடு செய்ய வேண்டும் என்று கீழே உள்ள பட்டியலைப் பார்த்து சரியான முதலீடு செய்யுங்கள்.

1. நிலம்
2. வீடு
3. பங்கு சந்தை
4. நிரந்தர வைப்புத் திட்டம்.
5. வியாபாரம்
6. மறு சுழற்சி வைப்பு திட்டம்.
7. கந்து வட்டி
8. தேசிய பாண்டு பத்திரங்கள்
9. மனைவியிடம் கொடுக்கவும்.

சத்தியமா
எல்லாத்துக்கும் அந்த கணக்கு டீச்சர்தான் காரணம்...

இன்று ஓர் இதழ் 7094053241 Whatsapp

அழகிய ஆரம்பம்...

இன்று ஈ இதழ்

பக்கம் 11

நாள் 30.03.25

indhrumail@gmail.com

மூங்கிலின் புலம்பல்

கே.அசோகன்,சென்னை



”அலறியது’அரற்றியது
அழுது புரண்டது
ஐயோ வெட்டுகிறானே
என்ன செய்வதாய் உத்தேசமோ?

பள்ளி பிள்ளைகளை
பயமுறுத்தவோ?
சாக்கடை சகதிகளை
சுத்தம் செய்யவோ?
புலம்பிய பொழுதினில்


தணலில் வாட்டினான்
கொடுமைக்காரன்...
குமுறியது

துளைகள் பல இட்டான்
துவண்டு “படுபாவி”
என சபித்தது

அலறி முடிக்கும் தறுவாயில்
அவன் கையிலொரு
அழகியதொரு புல்லாங்குழல்

கிள்ளிப் பார்த்து கொண்டது
ஆம்... நான் வாழ்கிறேன்
இனிய இசையாக என்றுமே
என மகிழ்ந்தது மூங்கில்


அடுத்த இதழில்
வேலூர் முத்து ஆனந்த்
அவர்களின்
டார்லிங் கதைகள்...



இன்று ஈ இதழ் | 7094053241 Whatsapp

அழகிய ஆரம்பம்...
இன்று ஈ இதழ்
indhrumail@gmail.com
பக்கம் 11
நாள் 30.03.25

கவிதை



சு.அருண்பிரகாஷ்
இராமச்சந்திராபுரம்
செல் : 8526037792

காதல் யானை

காதல் என்பது யானையைப் போன்றது
அது
சவாரி செய்பவனையே
சமயத்தில்
சம்ஹாரம் செய்துவிடும்

தீராக் காதல்

எப்போதும்
நிரம்பித்தான் வழியுமே தவிர
ஒருபோதும்
ஒழுகித் தீராது காதல்

காதல் புரட்சி

உன் அழகு
என்னை அடிமைப்படுத்திய
அந்தக் கணத்தில்தான் தொடங்கியது...
உன் இதயத்தில்
ஆட்சியைப் பிடிப்பதற்கான என் புரட்சி

பேரின்பம் கொள்ளட்டும்

வெட்கத்தால் சிவக்கும்
உன் கன்னம்
பேரழகாய் இருக்கிறது.
இருப்பினும்
வெட்கத்தைச் சற்றே
விலக்கிக் கொள்...
பேரின்பமாகவும் இருக்கட்டும்
உன் முத்தத்தால்
என் கன்னம்
சிவக்கும் பொழுது

இன்று ஈ இதழ் | இன்று ஈ பதிப்பு | 7094053241 Whatsapp

அழகிய ஆரம்பம்...


இன்று இதழ்

பக்கம் 11
நாள் 30.03.25

indhrumail@gmail.com

இன்று இதழ் பதிப்பு 7094053241 Whatsapp

கவிதை



குடந்தை பரிபூரணன்.
செல் : 63845 38289

மன்மதனை வென்றான்

மன்மதனுன் காலடியில்
மலரம்பை வைத்து விட்டு
கண்கலங்கி நிற்பான்
கதிகலங்கி .
என்னாவேன் என்று வள்ளுவனும்
இன்பத்து பாலை வென்றான்
ஆனந்த் என்பான்.

தலைவரே..பெரிய தப்பு நடந்து விட்டது.

என்ன தப்பு?

ஆஸ்பத்திரியில் குடும்ப கட்டுப்பாடு அறையில்
என்னை சேர்த்து விட்டார்கள்.

திருச்சிற்றம்பலம் சுரேஷ்

Vikas Basic Grammar Class



Master your Grammar and write with confidence

COURSE HIGHLIGHTS:

. Understanding Grammar rules
.Perfect your sentence structure
.Preparing for your exam

vikasclasses.2023@outlook.com
Call @9962201523

COURSE SESSION:

- Every Monday, Wednesday and Friday
- Timing:6.30 pm to 7.30 pm

அழகிய ஆரம்பம்...

இன்று ஈ இதழ்

indhrumail@gmail.com

பக்கம் 11
நாள் 30.03.25

கவிதை



கவிஞர்.இல.இரவி
செ.புதூர்
செல்:9952113194

”முட்டாள்கள் தினம்..”

தாயின் கருவறையில் இருந்தபோதே...
மருத்துவரின் மறதியால் பிறந்தேன் ..
அப்போதே முட்டாள் ஆனேன்..

கள்ளிப்பாலுக்கு தப்பித்து..கண் விழித்தேன்..
அப்போதும் முட்டாள் ஆனேன்...

கல்லூரிப் படிப்பில்
காதல் வந்து கற்பை இழந்தேன்..
அப்போதும் முட்டாள் ஆனேன்..

தேர்தல் வாக்குறுதியில் தேவைகள் நிறைவேறும்“
என வாக்களித்தேன்..
அப்போதும் முட்டாள் ஆனேன்...

கல்யாணச் சந்தையில்
கனவுகளுடன் மேடை ஏறிய போதும்..
முட்டாள் ஆனேன்...

பிறப்பு முதல் இறப்பு வரை..
நாள்தோறும் எத்தனை முறை
ஏமாளியாகி முட்டாள் ஆகிறோம்..?

ஏமாற்றும் இந்த உலகில்..ஏப்ரல்-1
மட்டும் “முட்டாள்கள் தினம்“அல்ல...

என் போன்ற ஏமாளிகளுக்கு எல்லா நாளும்
“ஏப்ரல்-1“தான்...

கலர் கலர்
மொய் கவர்

20 கலர் கவர்கள் உங்கள் பெயர் ப்ரிண்ட் செய்து தரப்படும். கவர் தானாக ஒட்டிக் கொள்ளும் (Auto Paste) வசதியுடன் உள்ளது. வித்யாசமாக உங்கள் மொய் பணத்தை செலுத்தலாம்.

20 கவர்ஸ் Rs.150 + Courier Rs.50 = Rs.200
G.Pay ... 7094053241 and
send your address in Whatsapp...

இன்று ஈ இதழ் இன்று ஈ பதிப்பு இன்று ஈ இதழ் 7094053241 Whatsapp

அழகிய ஆரம்பம்...

இன்று ஈ இதழ்

indhrumail@gmail.com



கவிதை

-லி.நௌஷாத் கான்-
செல் : 971561093550

மஞ்சள் பூசிய மங்கை

மஞ்சள் பூசிய முகத்தில்
ஏனோ
அவள் ஏஞ்சலாய் தான் இருந்தாள்
ஏதோ ஒரு ஏக்கம்
அவள் சிவந்த
நெற்றி பொட்டில்
ஒட்டி கொள்ள தான்
பேராசையெனக்கு

அவள் வலிகளை உணர்ந்தவன்

ஒருபோதும்
அவள் குறைகளை
எள்ளி நகையாடுவதில்லை
மூச்சிருக்கும் வரை
அவளுக்கு உறுதுணையாய்
இருக்க வேண்டுமடா
மூணு நாள் தீட்டு
எவன் கொண்டு வந்ததடா?
அவள் இல்லையேல்
அகிலம் இல்லை
எதன் வழி வந்தாயோ
அதன் வலி புரியாமல்
தீட்டு பார்ப்பவன்
இழியவன் தான்
அவள் குப்பை தொட்டியில்
வீசியெறிந்த
இரத்தம் நிறைந்த
நாப்கின் பேட்களில்
இன்னமும் மிச்சமிருக்கிறது
அவள் சொல்லாத
இரணங்களும்-வலிகளும்

-லி.நௌஷாத் கான்-

இனிய நண்பர்களே...
உங்கள் நண்பருக்கு
அழகிய ஆரம்பம் இன்று - ஈ
இதழை அனுப்பி இதழின்
வளர்ச்சிக்கு உதவுங்கள்

இன்று ஈ இதழ் 7094053241 Whatsapp

அழகிய ஆரம்பம்...

இன்று ஈ இதழ்

பக்கம் 11
நாள் 30.03.25

indhrumail@gmail.com

வ்கக்ப ஷாணர்ஸ

ரூஸ்ர்ரம
வ்ழ்ராஷாரூர்ஸ்ஒ
ஸ்ரீஷாஷ்ரூ
ஸ்ங்ஷ்வுரூ
...ர்ரூஸ்ரி ...ர்ரூஸ்ரி
வ்ப்மாஷ் ஷ்ப்ரு
...வ்ப்யஷ்ப்ரு ப்மாஷ்

க்ரவ்ரூர்ர.ரூங்ரூ.வ்ஷ்

ஸ்... ஸ்... ஸ்... ஸ்... ஸ்... ஸ்... ஸ்... ஸ்...

தரகரே...பையனுக்கு ஒரு சின்ன வீடு இருக்கிறத நீங்க ஏன் சொல்லல?
ஒரு சின்ன வீடும் ஒரு ஏக்கர் நிலமும் இருக்குனு நான் சொன்னதை நீங்கதான் புரிஞ்சுக்கலை...

எம் அசோக்ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி

மருந்துக் கடைக்காரரே... என் பாவங்களைத் தூக்கி எறியும் மாத்திரை ஒண்ணு குடுங்க...

என்ன சார் சொல்றீங்க?

எறி த்ரோ மை சின் மாத்திரை கேட்டேன்.... புரியுதா?

அப்படி தமிழ்ல கேளுங்களேன்



எம் அசோக்ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி

”எப்படியா விபத்து நடந்திச்சு...
வண்டிய ரோட்டை பாத்து தானே ஓட்டின?”

”மன்னிக்கனும் எசமான்... கூகுள் மேப்ப பாத்து ஓட்டியதால, ரோட்டை கவனிக்கல”

ப.சோமசுந்தரம்
சென்னை 600129
போன்.8778414755

இன்று ஈ இதழ் ஈ பதிப்பு இன்று ஈ இதழ் 7094053241 Whatsapp

அழகிய ஆரம்பம்...

இன்று ஈ இதழ்

indhrumail@gmail.com

பக்கம் 11
நாள் 30.03.25

கீதம்பக் கவிதைகள்

அடிக்கடி தான்
சந்திக்க வருகிறாய்
ஆனால்
எனக்காக
நீ
ஒரே ஒரே முறையாவது
உன் வெட்கத்தை
வீட்டில்
வைத்து விட்டு
வரக் கூடாதா அன்பே

முத்து ஆனந்த் வேலூர்

ரீங்காரமிடும்
சிறுவண்டு
கட்டையொன்றை
சுற்றிச்சுற்றித்
துளைக்க முயற்சித்தது.

நீண்ட முட்டலுக்குப்பிறகே
அது கட்டையல்ல
கம்பியெனன்று
அறிந்தகன்றது.

நம்.திரு.ர அம்ஏச்
அரியலூர்

உன் கண்ணாடி வளையல்கள்
சிணுங்கி பார்த்ததுண்டு
இப்போது என்னடி
உன் மூக்கு கண்ணாடி கூட
வெட்கத்தால் சிவக்கிறது

-லி.நௌஷாத் கான்-

நட்சத்திரங்களை
ரசிப்பதாய்ச் சொல்லும்
உன் பதிலில் எனக்கு
நம்பிக்கையில்லை...
உண்மையைச் சொல்
சின்ன மீனைப் போட்டு
பெரிய மீனைப் பிடிப்பதுபோல
உன் கண்மீன்களை வீசி
விண்மீன்களைப் பிடித்துக்
கொண்டிருக்கிறாய்...
அப்படித்தானே

சு.அருண் பிரகாஷ்
இராமச்சந்திரபுரம்

அன்பே
இளநீர் சுவை
இனிதா?
இதழ்கள் சுவை
இனிதா?
மனதிற்குள்
பட்டிமன்றம்
கண்டறிய
நீ இளநீர் குடித்து விட்டெறிந்த
ஸ்டராவை
சுவைத்ததில்
உன்னிதழ்கள்
இனிமையென
உணர்ந்தேன்

கே.அசோகன்
சென்னை

கதைகளில், கவிதைகளில் வரும் அம்சங்கள் அனைத்தும் கற்பனையே... யாரையும் எதையும் குறிப்பிடுவன அல்ல...

இன்று ஈ பதிப்பு - 29 சக்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை வெளியிடுபவர், ஆசிரியர். ர.ஸ்ரீஹரி

செல் 7094053241 indhrumail@gmail.com



இன்றுவை படித்ததற்கு நன்றி...

இன்று ஈ பதிப்பு 7094053241 Whatsapp